Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 2

வெள்ளிக்கிழமை
28 நவம்பர் 2025

கார்த்திகை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## உருப்பெற்றது 'டித்வா' புயல்!

யாழ்ப்பாணம், நவ. 28
வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை புயலாக மாற்றம் பெற்றுள் 11



### தமிழர் தாயகமெங்கும்

# தீபங்களின் சுடர்மழையில் மாவீரர்கள் பூசிப்பு!

- கண்ணீர் வெள்ளத்தில் துயிலுமில்லங்கள்
- வெள்ளப் பேரிடரிலும் உணர்வுபூர்வ அஞ்சலி

கிளிநொச்சி, நவம்பர் 28

தமிழர் தாயகத்தில் இராணுவத்தின் வசமுள்ள துயிலும் இல்லங்களைத் தவிர, ஏனைய அனைத்து துயிலும் இல்லங்களிலும் நேற்று மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. கொட்டும் மழைக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டன. 11

# நாடு வெள்ளக்காடு 48 பேர் துயரச்சாவு

**பதுளையில் மட்டும் 23 பேர் இறப்பு**

**21 பேரைக் காணவில்லை**

**பல்லாயிரக்கணக்கில் இடப்பெயர்வு**



பசறை, நவம்பர் 28

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் வெள்ளப் பேரிடர் நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று இரவு வரையான தகவல்களின்படி 48 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பதுளை மாவட்டத்தில் மட்டும் 23 பேர் உயிரிழந்துள்ளனர். 11




## வடக்கின் ஊடாகவே 'டித்வா' புயல் நகரும்!

*பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், நவ. 28
வங்கக் கடலில் உருவாகியுள்ள 'டித்வா' புயல், வடக்கின் முழுப் பகுதியையும் உள்ளடக்கியே நகரும் .
- இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
'டித்வா' புயல் வடக்கு, வடமேற்குத் திசையில் நகர்ந்து வருகிறது. இது தற்போது மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இடைப்பட்ட மகா ஓயா பகுதியில் 11

## வவுனியாவிலும் வெள்ளப்பேரிடர்

இதுவரை 328 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவு

வவுனியா, நவ. 28
வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும்மழை காரணமாக வவுனியாவின் அனைத்து பகுதிகளும் வெள்ளத்தில் 11

## பாலர் பாடசாலைகளை மூடுமாறு உத்தரவு!

கொழும்பு, நவ. 28
நாட்டில் நிலவும் அசாதாரண கால நிலை காரணமாக அனைத்துப் பாலர் பாடசாலைகளையும் மூடுமாறு முன்பிள்ளைப் பருவ 11

## சீரற்ற காலநிலை காரணமாக உ/த பரீட்சைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 28
சீரற்ற காலநிலை காரணமாக உயர்தரப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்று, இன்று, நாளை ஆகிய மூன்று தினங்களில் நடைபெறவிருந்த 11

## எலிக் காய்ச்சலால் சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 28
யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியில் எலிக்காய்ச்ச 11

## மோசமான காலநிலை அரச பணியாளர்களுக்கு இன்று விசேட விடுமுறை

கொழும்பு, நவ. 28
நாடளாவிய ரீதியில் நிலவும் மிகவும் மோசமான காலநிலை காரணமாக, அத்தியாவசிய சேவைக 11

## யாழ்ப்பாணம் - தீவகம் படகுச்சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 28
தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக நயினாதீவு - குறிகாட்டுவான் இடையேயான தனியார் படகுச் சேவை நேற்று வியாழக்கிழமை முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக ஏற்கனவே நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான படகுச்சேவை நிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே நயினாதீவு - குறிகாட்டுவான் இடையேயான படகுச் சேவை நிறுத்தப்பட்டமை தொடர்பான அறிவித்தல் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4268
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள்
19 41 44 54
விசே. எழுத்து D

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1335
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள்
25 57 60 61

**NLB ஜய**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0294
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள்
7 8 4 0

**மெகா பவர்**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2374
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள்
50 60 63 75

**மஹஜன சம்பத**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6026
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள்
9 8 5 9 2 4

**தன நிதானய**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2056
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள்
43 49 67 75
விசேட எழுத்து B

**அத சம்பத**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0601
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள்
5 9 2 4

**சுப தவசக்**
திகதி 27.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0142
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள்
06 19 46

# தமிழர் தாயகமெங்கும் சுடர்விட்டன தீபங்கள்!


நல்லூர்




கோப்பாய்...


சாவகச்சேரி...


எள்ளங்குளம்...

**சுபிரி தன சம்பத**
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0734
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 6 7 9 9 1 7

**Super Ball** DLB
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3000
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 11 22 56 61

**சனிதா** DLB
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 03 10 25 36
வெற்றி வாரம் 5161

**SASIRI** DLB
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0830
வெற்றி இலக்கம் 08 14 19

**லக்ன ராசி**
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
மீனம்
வெற்றி இலக்கம் 10 40 43 60
சீட்டிழுப்பு வாரம் 4712
DLB

**KAPRUKA** DLB
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கம் 01 09 16 17
வெற்றி வாரம் 2176

**அத கோடிபதி** DLB
திகதி 27.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 13 36 39 75
வெற்றி வாரம் 2826


வடமராட்சி...




தேராவில்...


உடுத்துறை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்தில்

# அனர்த்தத்தின்போது அவசர உதவி; 021 211 7117 எண்ணை அழைக்குக!

**யாழ்ப்பாணம், நவ. 28**

**யாழ்.மாவட்ட மக்கள் அனர்த்தத்தின்போது அவசர உதவிகளைப் பெற்றுக்கொள்ள யாழ்.மாவட்டச் செயலகத்தின் 0212117117 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு 24 மணித்தியாலமும் தொடர்புகொள்ள முடியும் என்று யாழ். மாவட்டச் செயலர் பிரதீபன் அறிவித்துள்ளார்.**

அனர்த்த அபாயக் குறைப்பு நடவடிக்கைக்கு முன்னேற்பாடாகப் பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்களுடன் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்தம் ஏற்படும்போது உத்தியோகத்தர்கள் தமது கடமையிலிருந்து விலகமுடியாது. உணவுப் பொதிகள், தறப்பாள் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை வழங்கும்போது பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பில் வழங்கப்படவேண்டும்.

அனர்த்தத்தின்போது பொது மக்கள் அவசர உதவிகளைப் பெற்றுக்கொள்ள மாவட்டச் செயலக 0212117117 எனும் இலக்கத் தொலைபேசிக்கு 24 மணி நேரமும் தொடர்பு கொள்ள முடியும். இதன்போது அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் பதிலளிப்பார். அவர் பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் என் தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு அந்தத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச-66)

## நெடுங்கேணியில் கனமழை மருத்துவசேவை ஸ்தம்பிதம்

வவுனியா, நவ. 28

வவுனியா நெடுங்கேணியில் நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக நெடுங்கேணிப் பிரதேச மருத்துவமனையில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் மருத்துவமனையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வெள்ளப்பாதிப்பால் குறித்த மருத்துவமனையின் சேவைகள் தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவசர சேவைகள் மாத்திரம் செயற்பட்டுவருகின்றது.

வவுனியாவில் கடந்த இரு தினங்களாகத் தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றமையால் தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதுடன் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-110)




## அவசர உதவிக்கு அழையுங்கள்

யாழ்ப்பாணம், நவ.28

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகளை 117 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அழைப்பை மேற்கொண்டு அறிவிக்கமுடியுமென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டைப் பாதித்துள்ள சீரற்ற வானிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலையை எதிர்கொள்ள தற்போது அனைத்து மாவட்டங்களிலும் தேடுதல் மற்றும் மீட்புக்குழுக்கள் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுனாமி எச்சரிக்கை இலங்கைக்கு இல்லை

கொழும்பு, நவ. 28

இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தால் இலங்கைக்குத் தற்போது சுனாமி ஆபத்து இல்லையெனவும் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பாதுகாப்பாக உள்ளது எனவும் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை 10.26 மணிக்கு இந்தோனேசியாவின் வட சுமாத்திரா அருகே இந்தியப் பெருங்கடலில் ரிச்டர் அளவுகோலில் 6.6 ஆக நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்திருந்தது.

இந்த அதிர்வு பூமிக்கடியில் 25 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நாட்டைச் சூழவுள்ள கரையோரத்தை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், சுனாமி ஆபத்து இலங்கைக்கு இல்லையெனவும், நாட்டின் கரையோரப் பகுதிகள் பாதுகாப்பானவையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெள்ளத்தில் சிக்கிய பஸ்; பயணிகள் அருந்தப்பு!



கொழும்பு, நவ. 28

மொனராகலை - கொழும்பு பிரதான வீதியில் பேருந்து ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பேருந்தில் இருந்த பயணிகள் பிரதேசவாசிகளின் உதவியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. சுமார் 23 பயணிகள் பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தின்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## சனம் செத்தாலும் கவலையில்லை!

பிச்சை எடுக்குதாம் பெருமாள் அதைத் தட்டிப் பறிக்குதாம் அனுமார் எண்டு சொல்லுறதைக் கேள்விப்பட்டிருப்பியள். அதேகதை இப்ப ரத்ததானத்திலையும் நடக்குது. எப்பவுமே மாரிகாலத்தில ஆஸ்பத்திரியளில ரத்தவகைக்கு கடும் தட்டுப்பாடு வரும். ஏனெண்டால் மாரிகாலத்தில தான் டெங்கு, சிக்கன்குனியா, வைரஸ், எலிக்காய்ச்சல், பண்டிக்காய்ச்சல் எண்டு எல்லா வருத்தமும் வரிசை கட்டிக்கொண்டு வரும். அதோட அக்சிடெண்டுகள், மண்சரிவு, வெள்ளத்தால வாற பாதிப்புகள் எண்டு ஆஸ்பத்திரியள் எல்லாம் வருத்தக்காரரால நிரம்பி வழியும். இப்பிடி வருத்தக்காரர் கூடக்கூட அவைக்குத் தேவையான ரத்தவகையளுக்கும் தட்டுப்பாடு வரும். அதால தான் மாரிகாலத்தில "ரத்தத்தட்டுப்பாடு இருக்குது. எல்லாரும் வந்து ரத்ததானம் செய்யுங்கோ" எண்டு ரத்த வங்கிக்காரர் காலில விழாத குறையா கெஞ்சுவினம்.

அவையொண்டும் தங்களுக்குச் சொத்துச் சேர்க்கிறதுக்காக இப்பிடிக் கெஞ்சுறேலை. ரத்த வங்கியில ரத்தம் இல்லாட்டி, வருத்தக்காரருக்கு ஏத்துறதுக்கு ரத்தம் இருக்காது. பிறகு வீணான உயிரிழப்புகள் பெருகும். இப்பிடியான அசம்பாவிதங்கள் நடக்கக்கூடாதெண்டுதான் "ரத்ததானம் செய்யுங்கோ" எண்டு பிச்சைஎடுக்காத குறையா கெஞ்சிக் கேக்கிறவை. ஆனாலும் அப்பிடிக் கேட்டாலும் ரத்தம் குடுக்கப் போறவை அரிதிலும் அரிது. இப்பத்தைப் பெடிபெட்டையளிட்ட ரத்ததானம் மாதிரி நல்ல விசயங்களில ஆர்வமே இல்லை. அவைக்கெல்லாம் இப்ப ரிக்ரொக்கிலையும், இன்ஸ்டாகிராமிலையும் ரீல்ஸ் போடுறதும், விதவிதமான சாப்பாடுகளைச் செய்து படமெடுத்துப் போடுறதிலையும் தான் ஆர்வம் கூட. அதோட இப்ப பெடிபெட்டையளிட்ட பச்சை குத்துற வருத்தமும் பரவிறபடியால, ரத்ததானம் செய்யிற ஆக்களின்ர தொகை இன்னும் குறைஞ்சுகொண்டே போகுது.

இப்பிடிப்பட்ட நிலைமையில, மாவீரர் நாளுக்காக கன இடங்களில ரத்ததானம் நடந்தது. ஆனால் அங்க அந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவைக்கும், ரத்தம் குடுக்கப் போனவைக்கும் புலனாய்வுக்காரர் கடும் கரைச்சல் குடுத்திருக்கினம். இவையின்ர ஆய்க்கினை தாங்கேலாமல் சிலர் ரத்தம் குடுக்காமலே திரும்பியும் போட்டினமாம். "நாங்கள் இப்பிடிக் கஷ்டப்பட்டு ரத்ததான நிகழ்வை நடத்தி, காலில விழாத குறையா ஆக்களைக் கெஞ்சிமண்டாடி கூட்டிக்கொண்டு வர, இன்ரெலிஜண்ட்காரர் இப்பிடி கரைச்சல் குடுத்தால் என்ன செய்யிறது?" எண்டு ரத்ததானத்தை ஒழுங்கு செய்தவை சலிச்சுப் போய் இருக்கினம். புலனாய்வுக்காரரின்ர விசாரணையளும், படமெடுப்புகளும், வெருட்டுகளும் எல்லைமீறிப் போனதால " இனிமேல் நான் ரத்ததான நிகழ்வையே செய்ய மாட்டன்" எண்டு வடமராட்சியில, ரத்ததானம் செய்யிற ஆக்களுக்கெண்டு இருக்கிற அமைப்பின்ர செயலாளர் பதவி விலகப் போறன் எண்டு சொல்லியிருக்கிறார். உந்த வெருட்டுக்கெல்லாம் புலனாய்வுக்காரர் பயப்பிடாயினம். அவைக்கு ஆயிரம் சனம் சாகிறதைப் பற்றிக் கவலை இல்லை, தாங்களா முன்வந்து ரத்தம் குடுக்கிறவையை ஊக்குவிக்கோணுமெண்ட எண்ணமும் இல்லை. "எப்பிடியாவது ஆய்க்கினை பண்ணி உந்த ரத்ததான நிகழ்வை நிப்பாட்டோணும்" இதுமட்டும் தான் அவையின்ர இலக்கு. இப்பிடிப் பின்விளைவுகளை யோசிக்காமல் ரத்ததானங்களிலும் தங்கட ஆமிக்குணத்தை புலனாய்வுக்காரர் காட்ட வெளிக்கிட்டினம் எண்டால், இனிமேல் இஞ்ச ரத்ததானம் செய்யவே ஆக்கள் இல்லாமல் போடுவினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். பல்கலைப் பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள் ளார். நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரான குமாரசாமி சத்தியகுமார் என் பவரே உடனடியாகச் செயற் படும்வகையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள் ளார். கடந்த வருடம் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் களில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வராத உறுப்பினர் ஒருவரின் வெற்றிடத்துக்கு எஞ்சிய காலப்பகுதிக்கு 2028ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் நியமனத்துக்காக மூன்று பேரைத் தெரிவுசெய்து, ஜனாதிபதிக்குப் பரிந்துரைப்பதற்கான தெரிவுக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பேரவையில் நிலவிய வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. (எ-26,66)



கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு வட்டாரத்துக்கு உட்பட்ட மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் நடைபெற்றது. (ச-113)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 06 . 1945



மறைவு 25 . 11 . 2025

## பாலசிங்கம் திருஞானசம்பந்தர்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் திருஞானசம்பந்தர் அவர்கள் கடந்த (25.11.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மதேவி, மற்றும் பாஸ்கரன் (நாரந்தனை), ரேணுகாதேவி (கொழும்பு), காலஞ்சென்ற பிறேமாதேவி ஆகியோரின் சகோதரரும், பகீரதன் (சரவணை), பிரபாகரன் (பிரான்ஸ்), கவிதா (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுயாதா, சாரதா காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் மாமனாரும், டிலக்ஷன், சஜீதா, கஜீபன், நிதுசன், பானுஷா ஆகியோரின் பேரனும், திருவிளங்கம் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான சந்திரா, கணேஸ்வரன் மற்றும் தவமணிதேவி, பரஞ்சோதி, கிருஷ்ணபாமா, சறோஜினிதேவி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
076 653 4317, 077 039 3290

கிளுவானை லேன்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(CS/60015) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 07 . 1942



மறைவு 27 . 11 . 2025

## கதிரத்தம்பி சபாநாதன்

துறைவீதி இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய், கொழும்பு கிருலப்பனையை வதிவிடமாகவும் கொண்ட சுகாதார அமைச்சு, பெருந்தெருக்கள் அமைச்சு ஆகியவற்றில் பிரதம கணக்காளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கதிரித்தம்பி சபாநாதன் அவர்கள் நேற்று 27.11.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - அன்னம்மா தம்பதியரின் மகனும், முத்துதம்பி - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பாலகுமரன் (கனடா), கருணாகரன் (சுதுமலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாசுகி (கனடா), சோபனா (சுதுமலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், பிரஜான் (கனடா), மேழி (சுதுமலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அருளம்மா, பரமேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான மலர்மணி, யோகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 28.11.2025 காலை 10 மணிக்கு சுதுமலையில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: வை.குகதாஸ்
மருமகன் - ஓய்வு நிலை கணக்காளர்

(CR 60018) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வெள்ளம் வரும் முன்...!

வங்கக் கடலில் உருவாகி தென்கிழக்கு மற்றும் தென்மேற்குத் திசைகளில் இருந்து ஒன்றிணைந்த காற்றுச்சுழற்சிகள் தீவிர காற்றழுத்தத் தாழ்வாக மாறியுள்ளன. 130 வருடங்களுக்குப் பின்னர் இலங்கையில் மிக அபூர்வமானதும், அதேநேரத்தில் மிகக் கடுமையானதுமான காலநிலை ஏற்பட்டுள் ளதாக வானியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பெரும்பாலும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களை நோக்கி நகரும் இந்தக் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், அடுத்த சில நாள்களில் 350 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழையைப் பொழி யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கிழக்கின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், மேலும் கன மழை கிடைக்கும்போது தீவிரமான வெள்ளப்பெருக்குகள் ஏற்படுவதும், மக்கள் இடம்பெயரவேண்டிய சூழ்நிலைகள் உருவாகுவதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். வடக்கிலும் மழை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதையும், இன்று 28 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்பு இருப்பதையும் கருத்திற்கொண்டு அதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

இந்நிலையில் மிகவும் கவலையளிப்பது, இந்த மாதிரியான எச்சரிக்கைகளை பொதுமக்களும், சில அரச துறைகளும் அக்கறையுடன் எடுத்துக்கொள்ளாததே ஆகும். நேற்று பதுளையில் ஏற்பட்ட மண்சரிவால் 22 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்த துயரச்சம்பவம் இதற்கு நல்ல உதாரணம். வருடாவருடம் வெள்ளமும், நிலச்சரிவும், புயலும் உயிரிழப்புகளையும் சொத்தழிவுகளையும் ஏற்படுத்திக்கொண்டே இருந்தபோதிலும், இந்த பழைய பாடங்களிலிருந்து பலரும் எதையும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. மண்சரிவு அல்லது வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் வசிப்போரை வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு முன்கூட்டியே மாற்றுவது, குடிநீர், மருந்து, அவசர ஒளி உபகரணங்கள் போன்றவற்றை தயார்நிலையில் வைத்திருப்பது, பள்ளங்கள், வடிகால்களைச் சீராக்குவது போன்ற அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அவசியம் குறித்த விழிப்புணர்வு பெருமளவில் நம்மிடையே இல்லை. அதேபோல், பேரிடர் முகாமைத்துவத்திற்கு பொறுப்பானதிணைக்களங் களில்ஒருங்கிணைப்புக் குறைபாடுகள் இருப்பதும், தகவல் பரிமாற்றம் தாமதமாக நடைபெறுவதும், பாதிப்புகளை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

இவ்வாறான காலநிலை எச்சரிக்கைகள் ஒரு சாதாரண அறிவிப்பு அல்ல; அவை உயிரைக் காக்கும் முன்னறிவிப்புகள். அதனைப் புறந்தள்ளுவதோ, அலட்சியம் செய்வதோ என்பது கூடுதல் ஆபத்திற்கே வழிவகுக்கும். வானிலை நிபுணர்கள் தெளிவாகக் கூறியுள்ள இந்த அபாயநிலையை மக்கள் உணர்ந்து, தமது குடும்பத்தையும் சொத்து களையும் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டும். அரசு மற்றும் உரிய திணைக்களங்கள் தங்களது பொறுப்பை மிகத் தீவிரமாக உணர்ந்து, மீட்புக் குழுக்கள், மருத்துவ அணிகள், அவசர தங்குமிடங்கள் போன்றவற்றை உடனடியாக தயாராக்க வேண்டும். தகவலை விரைவாகவும் துல்லியமாகவும் மக்களிடையே பரப்பவேண்டியது அவசியம். வானிலை பற்றிய அறிவிப்புகளை உண்மையான எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு செயற்படும் மனநிலை இல்லாதவரை, ஒவ்வொரு வருடமும் இதே காட்சிகளை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டிய நிலை தொடர்ந்துகொண்டே போகும். நேற்று பதுளையில் நடந்த சோகத்தைப் போல தொடர்ந்தும் இயற்கையின் சீற்றத்துக்கு இரையாகும் நிலையும் நீடிக்கும். எனவே இவற்றைத் தவிர்க்க வெள்ளம் வருமுன்னரே அணைகட்ட எல்லோரும் முன்வரவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



மரநடுகை மாதம் (நவம்பர்)

"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.!"

– ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)–



# மீன்பிடித்துறைக்கு இனி மறுமலர்ச்சி

கடற்றொழில் பிரதியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 28
மீன்பிடித்துறையில் கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சினை கள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. அந்த சவால்களை எதிர்கொண்டு பிரச்சி னைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. வடக்கிலும், கிழக்கிலும் மீன்பிடித்துறை முகங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ச ஆட்சிக்காலத்தில்தான் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இவற்றை மறந்து தற்போது மீன்பிடித்துறை பற்றி கதைக்கின்றனர்.

2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் எமது அமைச்சுக்குப் போதுமானளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன-என்றார். (ச-44)

## ஆயுதத்தால் தாக்கி யுவதி கொலை!

கொழும்பு, நவ.28
மெதிரிகிரிய - நவநகரய பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் மெதிரிகிரிய நவநகரய பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

தனது பாட்டியுடன் வீட்டில் இருந்தபோது குறித்த பெண்ணின் தாயின் இரண்டாவது கணவர் இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## உதித லொக்குவின் துப்பாக்கி கைப்பற்றல்

கொழும்பு, நவ.28
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதித லொக்குபண்டாரவுக்குச் சொந்தமான துப்பாக்கியை நுகேகொட பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் சட்டபூர்வமான தன்மை குறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி நுகேகொடவில் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சிப் பேரணியின்போது அவர் இந்தத் துப்பாக்கியை வைத்திருப்பதைக் காட்டும் காணொலிக் காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கால்வாயில் கார் கவிழ்ந்து மூவர் பலி

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிலுள்ள கரைவாகுப்பற்று பகுதியில் வெள்ளநீர் நிரம்பிய கால்வாயில் கார் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் பிள்ளை ஆகிய மூவரும் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. சீரற்ற வானிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)



## வடமத்திய மாகாணத்தில் போக்குவரத்துப் பாதிப்பு

கொழும்பு, நவ.28
கடும் மழைவீழ்ச்சியால் மட்டக்களப்பு - பொலநறுவை பிரதான வீதியில் மனம்பிட்டிய பகுதி நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமத்திய மாகாணத்தில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால், வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

நாளை
சனிக்கிழமை – கார்த்திகை 13
29.11.2025
சுபநேரம் : 03.13 - 04.43
ராகுகாலம் : 09.13 - 10.43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உரிமைப் போராட்ட வரலாற்றில் 'உதயன்' மிகையானவன்



உதயன் பத்திரிகை தனது ஊடகப் பணியில் 40 ஆவது ஆண்டினை வெற்றிகரமாக நிறைவு செய்வதனை முன்னிட்டு உதயனை வாழ்த்துவதில் தமிழ்த் தேசிய பேரவை மகிழ்வடைகின்றது.

தமிழ் மக்களது உரிமைப் போராட்ட வரலாற்றில் உதயன் பத்திரிகையின் பங்கும் பணியும் என்றும் மறக்க முடியாதவை.

உதயன் பத்திரிகையானது ஆரம்பம்முதல் தமிழ் மக்களின் உரிமைக்காகவும், தமிழ் மக்கள் மீதான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வந்துள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசத்தின் மீது சிங்கள தேசம் ஆக்கிரமிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டிருந்த சூழலிலும் யுத்த களத்திலிருந்து வெளிவந்த துணிச்சல் நிறைந்த பத்திரிகையாகும். நெருக்கடிகள் மத்தியிலும் உண்மைகளை யுத்த களத்திலிருந்து வெளிப்படுத்துவதில் துணிந்து செயற்பட்டமையினால் அதன் ஊடகவியலாளர்கள் பலர் அரசினாலும் அதன் துணை இராணுவக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பத்திரிகை அலுவலகமும் அதன் பொறித்தொகுதியும் கூட மோசமாகத் தாக்கிச் சேதமாக்கப்பட்டது.

அவ்வாறு நெருக்கடிகளைச் சந்தித்திருந்த போதிலும், அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தமையினால் உதயன் பத்திரிகை மீது மக்களுக்கு ஆழமான நம்பிக்கையும் மரியாதையும் வளர்ந்தே வந்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளாலேயே மக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

அந்த நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்யாத வகையில் மக்களுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் தகவல்களை வழங்கி, அறிவூட்டி வழிகாட்டிச்செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் உதயன் பத்திரிகை நிறுவன உரிமையாளருக்கும் ஆசிரியர்கள், செய்தியாளர்கள் உத்தியோகத்தர்களுக்கும் உண்டு. அந்தக் கடமையை உதயன் பத்திரிகை சரிவர ஆற்றி வந்துள்ளது. எதிர்காலத்திலும் அந்த நெறிமுறைகளைக் கடைப்பிடித்து செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஒவ்வொரு பத்திரிகையின் ஆசிரியர் பீடமும் தனித்துவமான கொள்கைகளைக் கொண்டிருக்கமுடியும். எனினும் மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்படும்போதும் அந்தக் கருத்துகளுக்கும் இடமளித்து தனது கொள்கைகளை வெளிப்படுத்தக்கூடிய சிறந்த ஊடக தர்மத்தை உதயன் பத்திரிகை தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்றும் நம்புகின்றோம்.

இலங்கைத்தீவில் எமது இனம் தனது இருப்புக்காக நீண்ட நெடிய போராட்டத்தை, ஈடுசெய்ய முடியாத விலைகொடுத்து நடத்தியுள்ளது. தனது இலக்கை நோக்கி தமிழ் இனம் இன்னமும் போராடிக் கொண்டேயிருக்கின்றது. இந்த விடுதலைப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால் இந்தத் தீவை மையப்படுத்தி இடம்பெறும் பூகோள ஆதிக்கப் போட்டியும், இப் போட்டியில் தமிழ் மக்களது நலன்களை அடைந்துகொள்வதற்கு ஏற்ப, எவ்வாறு தமிழ்த் தரப்பு நடந்து கொள்ளவேண்டும் என்பது தொடர்பிலும், இன்று தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள மிக ஆபத்தான அரசியல் சூழ்நிலையில் தமிழ் மக்களை ஏமாற்றி, ஒற்றையாட்சி (ஏக்கியராஜ்ய) அரசியல் அமைப்பை கொண்டுவர முயற்சிக்கும் ஆபதத்தான செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்கள் அறிவூட்டப்பட்டு தெளிவூட்டப்பட்டு வழிகாட்டப்படல் வேண்டும். அவ்விடயத்தில் உதயன் பத்திரிகை தனது பொறுப்பை உணர்ந்து தமிழ் மக்களின் உண்மையான தமிழ்த் தேச விடுதலைக்காக செயற்படும் எனவும் நம்புகின்றோம்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**
நாடாளுமன்ற உறுப்பினர்
தலைவர்,
தமிழ்த் தேசியப் பேரவை

# அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுபவன் உதயன்



நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதில் ஊடகத்துறையின் பங்கு மிக முக்கியமானதாக அறியப்படுகிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக அடையாளப்படுத்தப்படும் ஊடகத்துறையூடாக உதயன் பத்திரிகையானது அமைதியும் நீதியும் நிறைந்த தகவல் அறிந்துகொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதில் தொடர்ந்து செயற்பாட்டாளராக இருப்பதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.


கடந்த காலங்களில் ஊடகச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்திய பல சவால்களை இந்த நாடு சந்தித்திருந்தாலும், தற்போது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கும் முற்போக்கான ஒரு பொது உரையாடலுக்கும் புதிய தளம் உருவாகியுள்ளது.

ஊடக ஒழுக்கமும் ஊடகச் சுதந்திரமும் வலுப்பெறுவதற்கென, புதிய ஊடக கொள்கையை ஒன்றை உருவாக்கி வருகிறோம். இத்துறையில் நீங்கள் தொடர்ந்து வழங்கி வரும் பங்களிப்பையும் முற்போக்குச் சிந்தனைகளையும் நாங்கள் மதிக்கின்றோம். மேலும், தகுதி வாய்ந்த ஊடக வல்லுநர்களை உருவாக்குவதனையும், துறையின் தரத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு 'ஸ்ரீலங்கா சார்ட்டர்ட் மீடியா புரொஃபெஷனல்ஸ் இன்ஸ்டிட்யூட்' ஒன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

நாட்டில் வடக்கு- தெற்குக்கிடையிலான தகவல் பரிமாற்றத்தில் இன்னமும் ஒரு இடைவெளி இருப்பது அனைவரும் அறிந்ததே. 2024 ஆம் ஆண்டில், வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த சமூகங்கள் அரசாங்கத்தை நோக்கிய தமது எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தியதை நாங்கள் கண்டிருக்கின்றோம். இது உறுதியான தகவல் பரிமாற்ற வழிகளதும், அனைவரையும் உள்ளடக்கிய ஒரு ஊடக பிரதிநிதித்துவத்தினதும் அவசியத்தை வெளிப்படுத்துகிறது. உதயன் பத்திரிகை, 41 ஆவது ஆண்டுக்குள் நுழையும் இந் நேரத்தில், நாட்டின் வடக்கு- தெற்கு இடைவெளியைக் குறைத்து, இந் நாட்டு மக்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழ்வதற்கு பங்களிப்புச் செய்யும் என நாங்கள் நம்புகிறோம்.

**கலாநிதி கௌசல்யா ஆரியரத்தன**
துணை அமைச்சர்
வெகுஜன ஊடக அமைச்சு
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

# உதயனுக்கு நிகர் ஏதுமில்லை



அகவை 41 இல் கால் பதிக்கின்ற உதயனை நாம் அக மகிழ்ந்து வரவேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். உதயனுக்கு நிகர் ஏதும் இல்லை .உதயனுக்கென்று தனி அம்சம் ஒன்று உண்டு. தனித்துவம் மிக்கவன். மக்களின் நீதிக்காக குரல் கொடுத்து போராடுபவன்.

பல்வேறு வகையான துன்பங்கள் துயரங்களைத் தனதாக்கி எப்பொழுதும் மக்களின் துன்பியல் நல்வாழ்விலும் இரண்டறக் கலந்து நடுநிலை வகித்து நாளாந்தம் மக்கள் கரங்களில் குழந்தைகள்போல் தவழ்பவன். உதயன் சுடரொளியாக - சஞ்சீவியாக - புதன்பொய்கையாக- மக்கள் கரங்களில் தவழ்கின்றான். கவிதை, கட்டுரை, இலக்கியம், அரசியல், சிறுவர், உலகம், செய்திகள், புத்தக விமர்சனம் என்றவாறு பல்வேறு அம்சங்களுடன் வெளிவரும் நாளேடு எங்கள் உதயன். இதற்கு அயராது உழைக்கும் உதயன் பணிக்குழாமின் பங்களிப்பு அளப்பரியது. உதயனின் சேவை மென்மேலும் தொடரவேண்டும்.

**நாகலிங்கம் தங்கவேல்**



# 'உதயன்' உனக்கொரு வாழ்த்துப்பா

உதயம் கைசேரும்,
உதயன் உனக்கின்று,
ஒரு வாழ்த்தை உரைப்பதிலே,
உவகை கொள்வேனே!

இதயம் நொருங்கிடவே,
இன்னல் பல கண்டகாலம்,
இடங்கள் பல பெயர்ந்து,
இருந்தவொரு கடுங்காலம்,
தடங்கள் துயரங்கள்,
தாம் கொண்ட பலகோலம்,
கடந்து வந்தனையே,
காலம் மறந்திடுமா?

படைப்பில் பேரிடமாய்,
பகிரா விடயம் எது???
கடந்த அரசியலா,
காணாத பெருஞ்சமரா???
படங்கள் பாடங்கள்,
பாலர் பிரிவுகளா???
உடனே சுடச்சுடவே,
உள்ளூர் தகவல்கள் !!!
இணையம் நமக்கெதற்கு,
துணையாய் நீ இருக்க???
வடக்கின் வசந்தம் நீ,
வாழ்த்திடுவேன் இந்நாளில் !!!

திணைக்களச் செய்தி பல
திசையெங்கும் சென்றடைய,
துணையாய் கூட எம்மில்,
இணைந்தவனே உதயன் நீ !!!
மனையியலும், மருத்துவமும்,
விவசாயமும், விலங்கியலும்,
சினிமாவும் பொது அறிவும்,
சம கால அரசியலும்,
இணையில்லா கலைப்படைப்பு,
இது அல்ல இன்னும் பல
தினமெமக்காய் படைப்பவனே!!!
தகவல்களின் களஞ்சியமே!!!
இனிப்பாய் இந்நாளில்,
இவ்வாழ்த்தை நான் பகன்றேன்,
தரமாய் உன் படைப்பில்,
தொடர்வாய் உன்சேவை!
இறைவன் துணையுடனே,
இன்னும் அகவை பல,
கறைகள் காணாமல்,
கண்டிடவே வாழ்த்துகின்றேன்!

**ச.ஜயந்தன்,**
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 03 . 1946

மறைவு
27 . 11 . 2025

## நாகம்மா மகாலிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், இசைத்துறை)**

நாகம்மா மகாலிங்கம் அவர்கள் நேற்று (27.11.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா (மின்சாரசபை தொழினுட்ப உத்தியோகத்தர்), குலசிங்கம் (ஆசிரியர்), இந்திராணி, தவமணி மற்றும் விமலதாஸ் தேவி (ஆசிரியர் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திவ்யமணி (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியை, கொழும்பு), ரதன் (பணிப்பாளர் புதுவசந்தம்), தயாபரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அனித்தா, மகிமா, ரதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன், கரிஸ், அஸ்வினா, அன்சிகா, நவீனா, தினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (28.11.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**மகன்**
**077 712 5424**

(CR/60017) J-1

# மரண அறிவித்தல்

மண்ணில்
17 . 05 . 1960



விண்ணில்
26 . 11 . 2025

## சொர்ணமலர் தவராசா

அம்பாள் வீதி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், காந்திஜீ வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சொர்ணமலர் அவர்கள் 26.11.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், தவராசாவின் அன்பு மனைவியும், கந்தசாமி, புனிததேவி, நடேசபிள்ளை, செல்வராணி மற்றும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, சுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கராசா, பவுண்கலா, பவானி, காலஞ்சென்றவர்களான செல்வராணி, சிறி ஆகியோரின் மைத்துனியும், வஜிஸ் (பிரான்ஸ்), விசி, பவுணன் (பிரான்ஸ்), மேனகா ஆகியோரின் அன்புத் தயாரும், விசி (பிரான்ஸ்), சுபா, துசிக்கா (பிரான்ஸ்), கண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாகித்தியன், அஸ்வின், அபிசன், அக்சித், எசான், எஸ்வாந், துவிக்சா (பிரான்ஸ்), பிரசன்னா, தருசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.11.2025 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60016) E

தொடர்புகளுக்கு:
**077 136 2427**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல். வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் -02 T.C.இராசரத்தினம் வீதியில் அமைந்துள்ள ஆதனத்தினை குணபாலசிங்கம் பகீரதனும் பெண் சிவாசினியும் எனும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாதனம் பிரதேச சபைப் பதிவேடுகளில் பதியப்படவில்லை.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோவிற்பற்று உடுவில் பிரதேச செயலகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, கிராம அலுவலர் பிரிவு இணுவில் வடகிழக்கு J/190இணுவில் இறை. "இந்தனை" நிலப்பரப்பு 12, குளி 16 1/2 இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 01 குளி 16 1/2 ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.அருள்நேசன் அவர்களின் 3687ஆம் இலக்க 2019.11.01ஆம் திகதிய படத்தில் துண்டு 1 எனக் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குளி17உம் அதைச் சேர்ந்தவைகளும் என ஆதன அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு நாகேஸ்வரன் கோவர்த்தனன் அவர்களால் 2020.11.10ஆம் திகதி 53ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், இணுவில் மேற்கு, சுன்னாகம் வட்டுவினிவினி ஒழுங்கை, சின்னத்துரை கைலாயநாதன் (தே.அ.அ.இல.194836500434) அவர்களால் குணபாலசிங்கம் பகீரதனும் பெண் சிவாசினிக்கும் அறுதியாக வந்தடைந்துள்ளது. இவ்வுறுதியில் இதற்கு முற்பட்ட உறுதியாக 2020ம் ஆண்டு ஐப்பசி மாதம் 01ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் அவர்களால் எழுதப்பட்ட 44ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வெளிப்படுத்தல் உறுதி, யாழ்ப்பாணம், இணுவில் மேற்கு, சுன்னாகம் வட்டுவினிவினி ஒழுங்கை, சின்னத்துரை கைலாயநாதன் (தே.அ.அ.இல.194836500434) அவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் எனது பேரன் காலம்சென்ற கதிர்காமநாதர் கார்த்திகேசு என்பவர் "இந்தனையும் மறு பிரிவுகளும் நிலப்பரப்பு 12, குளி 16 1/2 விஸ்தீரணமுடைய ஆதனத்திற்கு பிரசித்த நொத்தாரிசு க.சபாபதி முன்பாக 1930.10.23ஆம் திகதி 17259ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியால் சொந்தக்காரராய் இருந்தார் (இதன் பதிவுH208/10) என்றும் பின்னர் குறித்த ஆதனத்தை காலஞ்சென்ற எனது தந்தையான கார்த்திகேசு சின்னத்துரை ஆட்சி பண்ணிவந்தார் (இதன் பதிவு H471/177) என்றும் பின்பு எனது தந்தை எனது சகோதரி இளையதம்பி பொன்னம்பலம் இராசையா பெண் திருமகளுக்கு இதில் ஒருபகுதியான நிலப்பரப்பு 05ஐ பிரசித்த நொத்தாரிசு ச.கனகசபாபாதி முன்பாக 1972.09.14ஆம் திகதியில் 7143ஆம் இலக்கத்தில் முடிந்த சீத்ன உறுதிப்படி சீதனமாக வழங்கினார் (பதிவுஉ417/177) என்றும் மிகுதியில் குறித்த சீதனம் கொடுக்கப்பட்ட ஆதனத்திற்கு வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 01 குளி 16 1/2 ஐ எனது தந்தையான கார்த்திகேசு சின்னத்துரை எவருக்கும் வழங்காது இறந்துவிட்டார். எனது ஏனைய சகோதரிகளுக்கு சீதனம் வழங்கப்பட்ட நிலையில் நானும் சின்னத்துரை அமிர்தலிங்கமும் வாரிசுகள் ஆவோம் எனவும், சின்னத்துரை அமிர்தலிங்கம் வாரிசுகள் இன்றி இறந்துவிட்டார் எனவும், 50வருடங்களுக்கு மேலான எனது ஆட்சியில் இருந்துவருகின்றது எனவும் சின்னத்துரை கைலாயநாதன் என்பவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாதனத்தை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக ஆதன வரிப் பதிவேடுகளில் குணபாலசிங்கம் பகீரதனும் பெண் சிவாசினியும் எனும் பெயரில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் சட்டரீதியான உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் எழுத்து மூலம் தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணபாலசிங்கம் பகீரதனும் பெண் சிவாசினியும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய சட்ட ரீதியான பிசகுகள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பேற்கமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. பிரகாஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

28.11.2025



# மேதகு - 71 இல் குருதிக்கொடை

**யாழ்ப்பாணம், நவ. 28**

**வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட 83 ஆவது இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வல்வெட்டித்துறையில் இடம்பெற்றது.**

தலைவர் மேதகு வே.பிரபாகரனுடைய 71 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வல்வெட்டித்துறை மண்ணின் மைந்தர்களின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. (ச-100)



உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில், மாவீரர்களின் பெற்றோர் நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர். (க-66)

**காணி விற்பனைக்கு**


**J/214, K.K.S வீதி மல்லாகத்தில் 2 1/4 பரப்புக் காணி (பழைய சோடா கம்பனி ஒழுங்கை அருகில்) விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.**

தொடர்புகளுக்கு:
**077 753 2994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1956



மறைவு 27 . 11 . 2025

### சுந்தரம்பிள்ளை ஈஸ்வரன்

கணேஸ்வரம் அளவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை ஈஸ்வரன் அவர்கள் நேற்று (27.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சுந்தரம்பிள்ளை - பரிபூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற திரு திருமதி தில்லையம்பலம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ஜெயந்தினியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், சயந்தன் (கனடா), சண்முகப்பிரியா (கட்டடங்கள் திணைக்களம்), கஜமுகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜெயசாந்தி, ஜெயசீலி, இன்பமதி (அதிபர்- தெல்லிப்பழை சைவப் பிரகாசம் வித்தியாசாலை), கமலவதனி, பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணேசராசா, பாலசுப்ரமணியம், பாலசுந்தரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (28.11.2025) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 27 99 359

(CR 49596) A

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 07 . 05 . 1994



மறைவு 16 . 10 . 2025

கடந்த 16.10.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எமது குலவிளக்கு

### அகிலன் திவ்யா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (29.11.2025) சனிக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.


"கலாநிதி வீதி"
ஏழாலை வடக்கு, ஏழாலை.

குடும்பத்தினர்.
077 548 1560

(CS 30812) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1952



மறைவு 27 . 11 . 2025

### கந்தையா உருத்திரசேனன்

### (ஆயுர்வேத வைத்தியர்)

சந்தை வீதி, காங்கேசந்துறையைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா உருத்திரசேனன் (ஆயுர்வேத வைத்தியர்) 27.11.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, இந்திராராணி மற்றும் தேவராணி, சிறிஸ்கந்தராசா (கனடா), பாக்கியராணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நற்குணநாதன், சொர்ணலிங்கம் மற்றும் வனிதாரமணி (கனடா), சிறிஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனரும், சந்திரசேகர், நிரஞ்சலா (கனடா), தேவலிங்கம், ஜீவகுமாரன் (கனடா), பிறேமலதா, தருமதன், ஸ்ரீதர்மினி (கனடா), ஸ்ரீபிரியதர்சினி (அமெரிக்கா), ஸ்ரீதயாகரன் ஆகியோரின் மாமனாரும், பிரதீபன் (கனடா), சிவரஞ்சினி (கனடா), பார்த்தீபன் (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (28.11.2025) காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்திலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60019) E

தொடர்புகளுக்கு:
சொ.தருமதன் - 077 844 8531

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாதேவி பாலசுந்தரம்

அம்மன் வீதி சில்லாலையை பிறப்பிடமாகவும், மயிலிட்டியை வதிவிடமாகவும், பழைய தபாற்கந்தோர் வீதி நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி பாலசுந்தரம் அவர்கள் நேற்று (27.11.2025) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், திருவருட்செல்வி, கிருபைராஜா மற்றும் செந்தூர் செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாகரன், சயந்தா, யூட், அம்பிகைபாகன் ஆகியோரின் மாமியாரும், குணப்பிரசாத், திகப்பிரசாந், ரிதுஷனா, அபிஷனா, சங்கீர்த், அபிக்கா, சப்திகா, பியங்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சித்திர வேலாயுதம் மற்றும் நாகேந்திரம், பரமேஸ்வரி, பவளக்கொடி, காலஞ்சென்ற பரலோக நாதன், பரலோக நாயகி மற்றும் நித்தியானந்தன், மதியாபரணம், பற்குணராஜா ஆகியோரின் சகோதரியும், தவமலர், இரத்தினசிங்கம், செல்வராசா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் உமாதேவி, புஸ்பராணி, ரங்கநாயகி மற்றும் காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (28.11.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக நீர்வேலி - சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 917 4927
076 914 5382

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தெற்காசியாவின் கல்வி மையமாக உருவாகும் ESOFT UNI

கல்வி என்பது முன்னேற்றத்தின் அடிக்கல்லாகும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் எதிர்காலத்தை வடிவமைக்கிறது. இலங்கையின் வடக்கு மாகாணத்தில், **ESOFT Metro Campus** யாழ்ப்பாண வளாகம் 15 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்கல்வியில் முன்னோடியாக இருந்து, கல்வியில் சிறந்து விளங்குகிறது.

2009 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட **ESOFT Metro College** யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் தனது பயணத்தைத் தொடங்கியது, இந்தப் பிராந்தியத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சான்றிதழ், டிப்ளோமா மற்றும் உயர் தேசிய டிப்ளோமா (**HND**) கற்கைநெறிகளை வழங்குகிறது. கடந்த கால சவால்களைத் தாண்டி வடக்கில் தரமான கல்விக்கான அணுகல் இன்னும் மீட்டெடுக்கப்பட்டு வந்த ஒரு முக்கியமான நேரத்தில் **ESOFT** உருவானது. கல்வி ஒருமைப்பாடு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான உறுதியான அர்ப்பணிப்புடன், யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர்களுக்கு அறிவை வழங்குவதில் **ESOFT** முன்னணிப் பங்காற்றியது, ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் கற்றல் அனுபவத்திற்கான அடித்தளத்தை அமைத்தது.

இங்கிலாந்தின் மிகப்பெரிய விருது வழங்கும் அமைப்பான, இலங்கையில் உள்ள ஒரே பியர்சன் பிளாட்டினம் **[Pearson - UK ]** கூட்டாளராக, **ESOFT** இன் கல்வித் தரங்களை உயர்த்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை நிலைநிறுத்துகிறது. கூடுதலாக, லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகம் மற்றும் கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்துடனான கூட்டாண்மைகள் மூலம், மாணவர்கள் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்கிறார்கள்.

### புதிய அடையாளத்துடன் வெற்றிப் பயணம்: 15 ஆண்டுகளிற்கு மேலாக...

இந்தப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்க்கல்லாக, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில், எண். 609 இல் **ESOFT** யாழ்ப்பாணத்தின் புதிய பரிணாமத்தினை ஆரம்பிக்கின்றது, இது நிறுவனத்தின் வளர்ச்சியும் எதிர்கால இலட் சியங்களின் அடையாளமுமாகும். இந்த அதிநவீன வசதி, நவீன வளங்கள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் மாணவர்களை மையமாகக் கொண்ட வசதிகளுடன் கூடிய உயர்ந்த கற்றல் சூழலை உருவாக்குவதற்கான **ESOFT** இன் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.



**ESOFT UNI** பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு வரலாற்றுச் சாதனையை எட்டியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். நவீன வசதிகளுடன், மாணவர்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறைகள் கொண்ட எங்கள் புதிய **ESU – ESOFT Uni** வளாகத்தின் பிரமாண்ட திறப்பு விழா இன்று நிறைவேறியுள்ளது. வடக்கு மாகாணத்திற்கு **ESOFT** என்பது புதிய ஒன்று அல்ல. 2009 முதல், **Kingston University** மற்றும் **London Metropolitan University** போன்ற பிரபலமான பல்கலைக்கழகங்களுடன் இணைந்து, உலகத் தரத்திலான பிரிட்டிஷ் பட்டப்படிப்புகளை யாழ்ப்பாணத்திலேயே வழங்கி, எண்ணற்ற மாணவர்களின் வாழ்க்கையை மாற்றி வருகிறோம். இந்த புதிய முன்னேற்றத்துடன், கொழும்பில் போலவே, எங்கள் யாழ்ப்பாண வளாகத்திற்கும் உயர்கல்வி அமைச்சகத்தின் அங்கீகாரத்தை விரிவுபடுத்த முயல்கிறோம். இதன் மூலம் மாணவர்கள் வட்டி இல்லாத கடன் திட்டத்தின் கீழ் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தகைமைகளை பெறலாம்.

**Dr. Dayan Rajapakse**
Managing Director
ESOFT Group



யாழ் **ESOFT UNI** முதன்மை துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

**ESOFT** கடந்த 25 ஆண்டுகளாக இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனமாக இருந்து, சர்வதேசத் தரத்திலான தகுதிகளை மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. தொழில்நுட்பம், வணிக முகாமைத்துவம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் **ESOFT** இன் பட்டப்படிப்புகள் மூலம் நாடு முழுவதும் மற்றும் வெளிநாடுகளிலும் உயர்கல்வி, வேலை வாய்ப்புகள், தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் முன்னேறி வருகின்றனர். புதிய **ESU Uni Jaffna** வளாகம் வட மாகாண மாணவர்களுக்கு உயர்தர உயர்கல்வியை மிக நவீன மற்றும் நோக்கமுடைய வசதிகளுடன் வழங்கும் ஒரு முக்கிய முன்னேற்றமாகும். எதிர்கால தலைமுறைகளுக்கு அறிவு, திறன் மற்றும் முன்னேற்றத்தை வழங்கும் புதிய கல்விப் பயணத்தின் தொடக்கமாக இந்த முக்கிய நாளை நான் உணர்கின்றேன்.


**Prof S Mohanathas**
Pro Vice Chancellor ESOFT Uni - Jaffna
Chancellor - UoV
Former Vice Chancellor - UoJ


The Guidance Lounge


Student Lounge & Recreation Zone


Advanced Computing Lab


Library & Learning Commons


Moot Court Room


Sports & Fitness Hub


Lecture Theatre


The campus cafe




இன்று

ESU
ESOFT UNI

No. 609, Hospital Road, Jaffna,
www.esu.lk

076 8700 400


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துனுக்காய் பிரதேச சபை 2026 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்

துனுக்காய் பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. 28.11.2025 தொடக்கம் விணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். என்பதுடன் விண்ணப்ப பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00ம் செலுத்துதல் வேண்டும். விண்ணப் பங்கள்யாவும் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். 26.12.2025 ஆம் திகதி பி.ப 14.00 மணி வரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொகுதிகள்:

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் வேலைகள்
தொகுதி "C" - வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்
தொகுதி "D" - குடிசார் வேலைகள்

| தொ. இல | பொருட்கள் வழங்கல் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய டோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குழியலறை பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், காபிக், மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | புனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | அலங்காரப் பொருட்கள் |
| A - 19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A - 20 | தார் |
| தொ. இல | சேவைகள்/வேலைகள் விபரம் |
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழினுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (காற்று குளிராக்கி, தொலைநகல் நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக வேலை – சகலவித படிவங்கள், ஏனையவை |
| B - 06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B - 07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B - 08 | கோலவுடை தைத்தல் |
| B - 09 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B - 10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B - 11 | அச்சிடுதல் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம் சேவீஸ் செய்தல் |
| தொ. இல | வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலை |
| C - 02 | சுகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |
| தொ. இல | குடிசார் வேலைகள் (Civil works) - ICTAD / CIDA பதிவுஉள்ளவர்கள் மட்டும் |
| D - 01 | கட்டட நிர்மானமும் திருத்தமும் |
| D – 02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| D - 03 | கிணறு, குழாய் கிணறு அமைத்தல் |

நிபந்தனைகள்.

1. வழங்கல்கள், சேவைகள் குடிசார் வேலைகள் 31.12.2026ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை. தவிசாளருக்கு/ செயலாளருக்கு உண்டு.
3. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளிற்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
4. பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோருதல் மற்றும் கொள்ளவு செய்யும் உரிமை பிரதேச சபைக்குண்டு
5. வியாபார பதிவுசான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் சேவைகளுக்கு. மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவர்.
6. விலைமனுகோரும்போது முன்வராத கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்கள் & சேவைகளை வழங்காத, சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கும் உரிமை பிரதேசசபைக்குண்டு
7. விண்ணப்ப படிவங்களை நேரில் சமர்பிக்கலாம் அல்லது "வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் - 2026" என கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு "தவிசாளர்/செயலாளர், துனுக்காய். பிரதேசசபை, துனுக்காய்" எனும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்க முடியும்.
8. மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் 0212284926 அல்லது 0212284532 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர் / செயலாளர்,
பிரதேசசபை, துனுக்காய்.

## மாவீரர்களுக்கு விஜய் அஞ்சலி



TVK Vijay
4h

தீரத்துடன் களமாடிய மாவீரர்களை வணங்குவோம்!
தியாக தீபங்களின் நினைவைப் போற்றுவோம்!

சென்னை, நவ. 28

ஈழத்துக்காகப் போராடி வித்தாகிப்போன மாவீரர்களுக்கு, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

தீரத்துடன் களமாடிய மாவீரர்களை வணங்குவோம்! தியாக தீபங்களின் நினைவைப் போற்றுவோம்! என்று தனது அஞ்சலிக் குறிப்பில் விஜய் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கடற்றொழில் துறையை கைவிட்ட அரசாங்கம்!

### பெரமுன தெரிவிப்பு



கொழும்பு, நவ. 28

சர்வதேச நாணயநிதியம் தேவை யில்லை, கடல் வளம் மூலம் நாட்டை மீட்போம் எனக் கூறி ஆட்சியைப் பிடித்த இந்த அரசாங்கம் அந்த உறு திமொழியை தற்போது மறந்துவிட் டது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக் கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணயநிதியம் தேவை யில்லை, கடள் வளமே போதும் என்றவர்கள் இன்று சர்வ தேச நாணயநிதியத்துடன் இருக்கின்றனர். ஆனால் கடற் றொழில்துறை மேம்படுத்தப்படவில்லை. நவீன முறை மையை நோக்கி இந்தத் துறை நகரவில்லை. மாறாக கருவாடு மற்றும் மாசி என்பவற்றின் இறக்குமதி அதிகரித் துள்ளது. நவீன யுகத்துக் கேற்ப மீன்பிடித்துறை முன்னோக் கிச் செல்லவேண்டும். உள்நாட்டு மீனவர்களைப் பாதுகாக் காது, இறக்குமதி செய்தால்போதும் என்ற மனோநிலையி லேயே அரசாங்கம் இருக்கின்றது - என்றார். (ச-44)

## வளவாளர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.28

வடமராட்சி தெற்கு,மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தால், 2026 ஆம் ஆண்டுக்கான பாடநெறிகளைக் கற்பிப்பதற்கான வளவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன. நாடகமும் அரங்கியலும், வயலின் மிருதங்கம், சிங்களம் ஆகிய பாடநெறிகளை கற்பிக்கக்கூடியவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை கலாசார மத்திய நிலை யம் 15 ஆம் கட்டை உடுப்பிட்டி தெற்கு உடுப்பிட்டி எனும் முகவரிக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்குமாறு கலாசார மத்திய நிலையப் பொறுப் பதிகாரி கேட்டுள்ளார். (க-இ)

★★★★

யாழ்ப்பாணம்,நவ.28

சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தால், 2026 ஆம் ஆண்டுக்கான பாட நெறிகளை பகுதிநேரமாகக் கற்பிப்பதற்கான வளவாளர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கர் நாடக மற்றும் கிராமிய சங்கீதம், பரத மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக்கலை பாடநெறிகளை கற்பிக்கக்கூடியவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை கலாசார மத்திய நிலையம், பட்டினசபை வீதி, சங்கானை எனும் முகவரிக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ அல்லது நேர டியாகவோ அனுப்பி வைக்குமாறு கலாசார மத்திய நிலை யப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபங்களின்...

நாடெங்கும் அசாதாரணமாக கால நிலை நிலவிவரும் போதிலும், மக்கள் குடும்பம் குடும்பமாக ஒன்றுதிரண்டு வித்தாகிப்போன தமது பிள்ளைகளின், உறவுகளின், சகோதரர்களின் பெயர்களைச் சொல்லிக் கதறிய முத காட்சிகள் இதயங்களை கனக்க வைத்தன.
தாயகத்தில் கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம், உடுத்துறை, சாட்டி, கனகபுரம், முல்லைத்தீவுக் கடற்கரை, இரட்டை வாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அலம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், சுப்பர்மடம், ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளில் உள்ள துயிலுமில்லங்களில் அஞ்சலிப்பு உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. சரியாக மாலை 06.05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. 06.06 மணிக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. 06.07 மணிக்கு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டது.
துயலுமில்லங்களில் மாவீரர்களுக்கான 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே...' என்ற பாடல் ஒலிக்கவிடப்பட்டது. இந்தப் பாடலின் போது உறவுகள் மாவீரர்களை நினைத்து கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
(தொடர்புடைய படங்கள் பக்கம் 02)
(அ-ம-26,20,113,110,66,131,28)

## நாடு....

அம்பாந்தோட்டைக்கு தென்கிழக்காக 70 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் நேற்றுமுன்தினம் முன்னிரவு தீவிர காற்றமுத்த நிலையாக மாற்றம்பெற்று அம்பாறையை நோக்கி நகரத் தொடங்கியது. இதனால் நாட்டின் கிழக்குக் கரையோரங்களில் அதீதமான காற்றுடன் மழை கொட்டித் தீர்த்தது. அத்துடன் நாடளாவிய ரீதியிலும் வெள்ளப் பேரிடர் ஏற்படும் அளவுக்கு மழை கொட்டித் தீர்த்து வருகின்றது.
பதுளை மாவட்டத்தில் உச்சக்கட்டப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மண்சரிவுகள், நிலம் தாழிறங்குதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் அங்கு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. பதுளையில் மட்டும் நேற்று ஒரே நாளில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ள நிலையில், வீட்டின் மேல்தளங்களின் மீது ஏறிநிற்கும் மக்களை விமானப் படையினர் மீட்டு வருகின்றனர். மழை தொடரும் என்பதால், கட்டுப்படுத்த முடியாத பேரிடர்கள் மற்றும் இழப்புகள் ஏற்படும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது.
மீட்புப் பணிகளில் முப்படையினரும் தன்னார்வலர்களும் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டின் நீர்நிலைகள் அவற்றின் உச்சக் கொள்ளளவை எட்டியுள்ளதால், மழை தொடரும் பட்சத்தில் நிலைமை கட்டுக்குள் அடங்காமல் மோசமாகும் என சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால், பதற்றமும், பரபரப்பானதுமான நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளது. (அ-ம)

## வடக்கின்...

மையம் கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் இந்தப் புயலின் மையப் பகுதி முழுவதும் நிலத்தின் ஊடாகவே நகரும் வாய்ப்புள்ளது. ஆனாலும் நகர்வுப் பாதை இன்னமும் இறுதியாகவில்லை. இந்தப் புயலின் மையம், மற்றும் உள்வளையம் ஆகியன வடக்கு மாகாணத்தின் முழுப் பகுதியையும் உள்ளடக்கியே நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தற்போதைய நகர்வின்படி டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி தமிழகத்தில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
தற்போது புயலின் மையம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ளமையால் இப்பகுதிகளில் ஒரு அசாதாரண அமைதி நிலவும். ஆனால் அது நிலையானதல்ல. வடக்கைப் பொறுத்தவரை, வவுனியா மாவட்டத்துக்கு இன்றும், நாளையும் மிகக் கனமழை கிடைக்கும்.
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இன்றும், நாளையும் மிகக் கனமழை கிடைக்கும். மன்னார் மாவட்டத்துக்கு நாளை முதல் எதிர்வரும் முதலாம் திகதிவரை மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் படிப்படியாக கனமழை முதல் மிகக் கனமழையை எதிர்கொள்ளும். இது டிசெம்பர் மாதம் 2ஆம் திகதிவரை தொடரும் - என்றுள்ளது. (அ-ம)

## உருப்பெற்றது....

ளதாக வானிலை ஆய்வாளர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.
வங்கக்கடலில் சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்த காற்றமுத்தத் தாழ்வுநிலை, இரு தினங்களுக்கு முன்னர் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வுநிலையாக மாற்றம் பெற்றிருந்தது. இதைத் தொடர்ந்தே இன்று அதிகாலை அது 'புயல்' என்னும் நிலையை அடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. ஆழ்ந்த காற்றமுத்த நிலை புயலாக மாறும் நிலையை அடைந்துவிட்டதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் பேராசிரியர் நாபிரதீபராஜாவும் உறுதிப்படுத்தியிருந்தார்.
இந்தக் காற்றமுத்தம் புயலாக மாற்றம் பெற்றால் அதற்கு, 'டித்வா' என்று பெயரிடப்படும். யேமன் நாடு இந்தப் பெயரைப் பரிந்துரைத்துள்ளது. அதன் அர்த்தம் 'இயற்கையால் உருவான ஏரி' என்பதாகும். (அ-ம)

## வவுனியாவிலும்...

மூழ்கியதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியுள்ளது.
வவுனியாவில் நேற்றுமுதல் வரலாறு காணாதமழை பெய்துவருகின்றது. இதனால் வவுனியா நகரப்பகுதி முற்றாக வெள்ளத்தில் மூழ்க்கியதுடன், வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது. குறிப்பாக வைரவபுளியங்குளம், கொறவப்பொத்தான வீதி, கண்டிவீதி, மில் வீதி, பூங்கா வீதி, உட்பட பல வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், போக்குவரத்தும் முடங்கியுள்ளது.
இதேவேளை மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதுடன், பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன், வவுனியா மாவட்ட செயலகம், கடவுச்சீட்டு அலுவலகம் மற்றும் வவுனியா பிரதேசசெயலகம் ஆகியவற்றுக்குள்ளும் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 80 வீதமான குளங்கள் அதன் கொள்ளளவை எட்டியுள்ளன. அத்துடன் மூன்றுக்கும் மேற்பட்ட குளங்களில் உடைப்புகள் ஏற்பட்ட நிலையில், அவை அதி விரைவாகச் சரி செய்யப்பட்டுள்ளன.
மாவட்டத்தின் பெரிய குளமான பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை தாண்டி 20.3 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகளும் 2 அடிக்கு திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்குமாறு கோரப்பட்டுள்ளதுடன்,நெளுக்குளம் - நேரியகுளம் வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.
அதிகரித்த மழைவீழ்ச்சியால் 50 சதவீதத்திற்கும் அதிகமான நெற்பயிர்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளதுடன் மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இதேவேளை நேற்று மாலை 4 மணிவரை 328 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத் துவப்பிரிவுதெரிவித்துள்ளது. (அ-ம-110)

## பாலர்....

அபிவிருத்திக்கான தேசிய செயலகம் அறிவித்துள்ளது.
மறுஅறிவித்தல் வரும்வரை இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்றும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## எலிக்காய்ச்சலால்...

லால் பாதிக்கப்பட்ட சிறுவன், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளான். அல்வாய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பிரதீபன் லக்சிகன் (வயது 17) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். தொடர் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்ட குறித்த சிறுவன், கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தான். எனினும், நேற்றுமுன்தினம் இரவு 10:30 மணியளவில் உயிரிழந்துள்ளார். எலிக்காய்ச்சல் காரணமாகவே அந்த சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26,66)

## யாழ்ப்பாணம்....

விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, கடற்போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளமையால் நெடுந்தீவு மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு நெடுந்தீவுப் பிரதேச மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.
உடனடி மருத்துவத்துக்கான சாத்தியமற்ற தன்மைகளைக் கருத்திற்கொண்டு விபத்துகள், பாம்புக்கடி மற்றும் தவிர்க்கக் கூடிய நோய்நிலைகளைக் குறைத்து வீடுகளில் அவதானமாக இருக்குமாறும் நெடுந்தீவுப் பிரதேச மருத்துவமனை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (அ-ம-66)

## அரச....

ளில் ஈடுபடுபவர்கள் தவிர்ந்த அனைத்து அரச ஊழியர்களுக்கும் இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
அலுவலங்களில் தற்போது காணப்படும் பணியாற்ற முடியாத நிலைமை மற்றும் போக்குவரத்து இடர்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சீரற்ற...

பரீட்சைகளே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.
இதன்படி நேற்று நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் மாதம் 7ஆம் திகதியும், நாளை நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் மாதம் 8ஆம் திகதியும், நாளைமறுதினம் நடைபெறவிருந்த பரீட்சை டிசெம்பர் மாதம் 9ஆம் திகதியும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## மருத்துவமனையில் மஹிந்த!

கொழும்பு, நவ. 28
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச திடீர் உடல்நலக் குறைவு காரணமாக, கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மருத்துவ அவசரநிலை கருதி அவர் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், அவருடைய உடல்நிலை தற்போது சீராகவும் முன்னேற்றமாகவும் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதிப்பளிப்பு

கிளிநொச்சி,நவ.28


கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தர்மபுரம் பகுதியில் மதிப்பளிக்கப்பட்டது.

மாவீர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தலை மேற்கொள்ள, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து வருகைதந்த உறவினர்களே இவ்வாறு மதிப்பளிக்கப்பட்டனர். (க-113)




## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 12 . 1969



மறைவு
01 . 11 . 2025

### செல்லையா மதனராஸ்

யாழ் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன், பிரான்ஸ் Paris ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா மதனராஸ் அவர்கள் கடந்த 01.11.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற துரைநாயகம் மற்றும் நாகேந்திரராணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், நிவேதா அவர்களின் பாசமிகு கணவரும், மதுஷன், மதுஷினி, மதுமிதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராணி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரி, ஜெயராணி, சந்திரகுமார், சுகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செந்தினி, லதா, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் யாழினி, ராஜிகரன், சுமிதா, ஜீவிதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராஜேந்திரன், வைத்திலிங்கம், காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் செல்வராஜா, காலஞ்சென்ற கஜனி மற்றும் புலேந்திரா, மாதுரி ஆகியோரின் பாசமிகு சகலனும், கௌசிகா, துஸ்யந்தினி, திபாகர், சஜிந்தினி, கீர்த்திகா, லக்ஷிகா, திலீபன், கஜிபன், பிரவீனா, சுபாஜினி, ஜெசிந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜன், கிருஜன், சுகிர்த்தனா, வினோஜ், அபிநயா, நிமலன், நிர்த்திகா, விமலன், விர்த்திகா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Sevenoaks Indoor Bowls Club, Hollybush Close, Sevenoaks, Kent, United Kingdom, TN13 3UX என்னும் இடத்தில் இன்று 28.11.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 - 10.00 மணி வரை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
செ.சந்திரகுமார் (சகோதரன்)
தொ.பே.இல.0750415775
ராஜன் : 0740735807

21, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS 30815) A




கடற்கொந்தளிப்பு

# பரு. துறைமுகப் பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்லத்தடை!

யாழ்ப்பாணம், நவ. 28

புயல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் கடற்கொந்தளிப்புக் காரணமாகப் பருத்தித்துறைத் துறைமுகப் பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கரையோரப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் மாலை முதல் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதன் காரணமாக கடற்பரப்புக் கொந்தளிப்புடன் காணப்பட்டுவருகிறது. இதையடுத்து கரையோரப் பகுதிகளில் அலைகளின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதேவேளை பருத்தித்துறைத் துறைமுக இறங்குதுறைப் பகுதியில் கடல் அலைகள் மோதி பல மீற்றர் உயரத்துக்கு எழுகின்றன. இதையடுத்து குறித்த பகுதிக்குப் பொதுமக்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ச-100)

# பருத்தித்துறை நகரில் மேதகு 71 கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 28

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு 71ஆவது பிறந்தநாள் பருத்தித்துறை நகரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டாடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடத்தில் மாவீரர் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து மேதகு வே.பிரபாகரனின் 71 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் தலைமையில் கேக் வழங்கப்பட்டு கொண்டாடப்பட்டது. (ச-100)



# வடக்கின் இடர் நிலைமைகளுக்கு ஏற்ப முஸ்லிம் பாடசாலைகளை இயக்குக

யாழ்ப்பாணம்,நவ.28

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலைமையை அடிப்படையாகக் கொண்டு, முஸ்லிம் பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகளைத் தொடருமாறு வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அறிவித்துள்ளார்.

அந்தந்தப் பிரதேசங்களில் நிலவும் இடர் நிலைமை மற்றும் வானிலை மாற்றங்களைக் கருத்திற்கொண்டு முஸ்லிம் பாடசாலைகளை மூடுவது அல்லது தொடர்ந்து நடத்துவது தொடர்பான தீர்மானங்களை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ளவேண்டும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், அந்தந்தப் பிரதேசத்தின் சூழலுக்கேற்ப உடனடித் தீர்மானங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சீரற்ற காலநிலையால், நாடளாவிய ரீதியில் நேற்றும், இன்றும் அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க -66)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org